சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.110/2024

05.03.2026

வா.சா.1 திரு.ராஜசேகர், த/பெ. சீனிவாசன்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

பிரதிவாதி கடந்த 16.10.2023 அன்று ரூ.10,00,000/- கடனாக பெற்றுக்கொண்டாரா என்றால் ஆமாம். அப்போது பிரதிவாதியிடம் பூர்த்தி செய்யாத காசோலையை நான் கேட்டேன் என்றால் சரிதான். பிரதிவாதியிடம் பூர்த்தி செய்யப்படாத காசோலையை பொறுப்பிற்கு பெற்றுக்கொண்டதாகவும் பணத்தை திரும்ப கொடுத்துவிட்டு காசோலையை திரும்ப பெற்றுக்கொள்வதாக சொன்னேன் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு வட்டிக்காக நான் பணம் கொடுக்கவில்லை, எனது நண்பர் என்பதால் பணம் கொடுத்தேன். பிரதிவாதி பெற்ற கடன் ரூ.10,00,000/-ஐ 20.03.2021 லிருந்து ஏப்ரல் மாதம் 2022 வரை ரூ.20,000/- திரும்ப செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் 16.10.2023 ல் கடன் எதுவும் பெறவில்லை என்றாலும் 20.01.2021 ல் தான் ரூ.10,00,000/- கடன் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. 16.10.2023 ல் தான் வாங்கினார். 2022 மே மாதத்திலிருந்து நவம்பர் மாதம் வரை பிரதிவாதி என்னிடம் மொத்தம் ரூ.10,000/-ம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அதன் பிறகு 17.05.2023 வரை ரூ.20,000/- மும் 08.06.2023 ல் ரூ.5,00,000/-மும் 20.07.2023 ல் ரூ.5,00,000/-மும் என்னிடம் பிரதிவாதி செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் பெற்ற கடன் ரூ.10,00,000/-க்கு வட்டியுடன் சேர்த்து ரூ.14,30,000/- ஆக செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. நான் 1/- ரூபாய் வட்டிக்கு தான் பணம் கொடுத்தேன் என்றாலும் தற்போது வழக்கிற்காக கைமாற்றாக கொடுத்ததாக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் ரூ.1/- வட்டியுடன் தொகை செலுத்திய போதும் கூடுதலாக வட்டி கேட்டேன் என்றால் சரியல்ல. நான் கேட்ட கூடுதல் வட்டியை பிரதிவாதி கொடுக்காததால் அவர் கொடுத்த பூர்த்தி செய்யாத காசோலையை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி கொடுத்த பதில் அறிவிப்பில் மேற்கண்ட விவரத்தை சொல்லியுள்ளார் என்றால் சரிதான். பதில் அறிவிப்பிற்கு நான் மறுப்பு அறிவிப்பு

கொடுத்தேனா என்றால் இல்லை, வழக்கறிஞரிடம் வழக்கு தாக்கல் செய்ய சொன்னேன். நான் பிரதிவாதியிடம் பெற்ற தொகையை குறிப்பிட்டு வாட்ஸ்அப் மூலமாக பிரதிவாதிக்கு குறுஞ்செய்தி அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன விவரத்தை பிரதிவாதி பதில் அறிவிப்பில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில் பிரதிவாதிக்கு பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி கொடுத்த பதில் அறிவிப்பை பிராதில் சொல்லவில்லை என்றால் வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டுதான் பதில் அறிவிப்பு கொடுத்தார் அதனால் சொல்லவில்லை. பிரதிவாதி கொடுத்த பதில் அறிவிப்பை எனது தரப்பில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிராதில் கண்ட தொகையை பிரதிவாதி எனக்கு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.